இறக்காமம் பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 13 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இறக்காமம் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து காசுப்பாய்சல் கூற்று சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் காசுப்பாய்சல் கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா.8,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சினால் ரூபா. 10 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்ட கட்டிடப் பெறுமதியை கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 809,902 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| பொறியும் பொறித் தொகுதியும் | 1,147,518 | |
| கடன்கொடுத்தோர் இறைச்சிக் கடை குத்தகை நிலுவை | 1,032,909 | இறைச்சிக் கடை குத்தகைப் பதிவேடு |

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பிரதேச சபைகள் நிதி நிருவாக விதி 217 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் பிஎப் / 437 | வாகனங்களின் காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் இதற்கு முரணாக நான்கு வாகனங்களுக்கான காப்புறுதி பத்திரமானது தனியார் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ரூபா. 16,487 தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.778,948 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.58,373 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.720,575 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள், நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீத வரிகள் அறவிடுவதற்கான உபவிதிகளை உருவாக்கி வீதவரிகளை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 ஏனைய வருமானங்கள்

2003 முதல் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா.1,032,959 தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 உத்தரவுப்பத்திர கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுக்கமைய அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 09 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணத்தை சபை அறவிட்டிருக்கவில்லை.

2.2.4 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

(அ) நீதிமன்றத் தண்டப்பணம்

மீளாய்வாண்டுக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 25,000 தொகையினை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 206,881 தொகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமான முகாமைத்துவம்